## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 434/2016

நாள் 03.11.2025

DW2 – ராமசாமி

த/பெ – ஆறுமுகம்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of November 2025)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. முதலிகருப்பன் இறந்த போது அவருக்கு சுமார் 90 வயது இருந்திருக்கும் என்றால் 85 வயது இருந்திருக்கும். அவர் 2006–ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்த போது அவருக்கு என்ன வயது என்றால் சுமார் 85 வயது தான் இருந்திருக்கும். அந்த முதலிகருப்பன் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பாகவே பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு பேச முடியாமலும், நடக்க முடியாமலும் இருந்து வந்தார் என்றால் சரியல்ல, நன்றாக தான் இருந்தார். அவ்வாறு அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், அவரது மகன் முத்துசாமியின் மகளான பேத்தி மல்லிகா பராமரிப்பில் இருந்து வந்தார் என்றால் இல்லை. அதேபோல், நாகம்மாள் (எ) அம்மாசையம்மாள் என்பவருக்கும் புத்திசுவாதீனம் 10 ஆண்டு காலம் இருந்து வந்து இறந்து போனார் என்றால் சரியல்ல.

2. செட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதற்கு 2 நாட்களுக்கு முன்பாக எனது மாமனார் முதலிகருப்பன், எனது மாமியார் நாகம்மாள் (எ) அம்மாசையம்மாள் ஆகிய இருவரும் வந்து என்னிடம் சொன்னார்கள். அந்த தேதி எனக்கு ஞாபகமில்லை. அதனால் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்த தேதி எனக்கு தெரியாது என்றால், அந்த தேதி எனக்கு

தெரியும். நாயக்கன் தோட்டம் ராமசாமி ஆபிஸ் எங்கு உள்ளது என்றால் அவிநாசி தாலுகா ஆபிஸிற்கு மேற்கே உள்ள வீதியில் உள்ளே உள்ளது. அந்த ராமசாமி வீடு கிழக்கு பார்த்த வீடாக தான் உள்ளது. அந்த ராமசாமி ஆபிஸ் உள்ள வீட்டில் தான் அவர் குடியிருந்து வந்தாரா என்றால் அவர் அலுவலகம் இருந்தது, அவர் அந்த வீட்டில் குடியிருந்து வந்தாரா? என்று எனக்கு தெரியாது. அந்த ராமசாமி என்ன நிறத்தில் இருந்தார் என்றால் சிவப்பு நிறத்தில் தான் இருந்தார். அந்த ராமசாமியை 18—ம் தேதி முதன் முதலாக பார்த்தேன். அன்றைய தினமே பத்திரங்களை வாங்கி வந்து அவரிடம் கொடுத்து விட்டு வந்தோம். 18—ம் தேதி மாலை சுமார் 3.00 மணிக்கு ராமசாமியை போய் பார்த்தோம். அவரிடம் சுமார் 1 மணி நேரம் மட்டும் இருந்தோம். பத்திரம் வாங்குவதற்காக வேண்டி நானும், எனது மச்சனன், மாமியார் மற்றும் முருகேஷ், சிவசாமி கவுண்டர் ஆகிய எல்லோரும் சென்று பத்திரம் வாங்கி வந்தோம். எவ்வளவு தொகைக்கு பத்திரம் வாங்கினோம் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. கருப்புசாமி பெயரில் தான் பத்திரம் வாங்கினோம். மறுநாள் 19—ம் தேதி காலை சுமார் 8.00 மணிக்கு எல்லோரும் ராமசாமி ஆபிஸிற்கு சென்றோம். பத்திரம் எழுத யார் யார் விபரம் சொன்னார்கள் என்றால் எனது மாமனார், மாமியார் மற்றும் என் மச்சனன் கருப்புசாமி, முருகேஷ் மற்றும் சிவசாமி கவுண்டர் ஆகியோர்கள் விபரங்கள் சொன்னார்கள். அப்போது எந்தெந்த ஆவணத்தை கொடுத்தார்கள் என்றால் எனது மாமனார் பெயரில் இருந்த பத்திரம், எனது மாமியார் பெயரில் இருந்த பத்திரம் ஆகியவைகளை கொடுத்தார்கள். அது எந்த தேதியிட்ட பத்திரங்கள் என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது என்பதால் அந்த தேதி எனக்கு தெரியாது. சொத்தின் காலை நம்பர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பத்திரங்களை எழுத

எவ்வளவு நேரம் ஆனது என்றால் ராமசாமி ஏற்கனவே ஆவணங்களை வெள்ளைத்தாளில் தயார் செய்து வைத்திருந்தார். அந்த விபரத்தை எங்களிடம் படித்து காட்டிய பிறகு தான், பத்திர தாளில் தட்டச்சு செய்தார். அந்த பத்திரங்களில் செட்டில்மெண்ட் ஆவணத்தை சுமார் 1/2 மணி நேரத்திலும், உயில் சாசனத்தை 1/2 மணி நேரத்திலும் தட்டச்சு செய்து முடித்தார்.

3. அந்த செட்டில்மெண்ட் ஆவணம் எத்தனை பக்கம் இருந்தது என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது மாமனார் எல்லா பக்கங்களிலும் கைரேகை வைத்தார். கைரேகை பத்திரம் உள்ள கீறல் முதலிகருப்பன் என்பதை யார் எழுதினார் என்றால் பத்திர எழுத்தர் ராமசாமி தான் எழுதினார். ராமசாமி என்ற என்னுடைய சாட்சி கையெழுத்திற்கு அருகில் இருக்கும் எனது அப்பா ஆறுமுகம் என்பதையும், எனது விலாசத்தையும் பத்திர எழுத்தர் ராமசாமி தான் எழுதினார். அந்த செட்டில்மெண்ட் ஆவணம் தான் என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.12 என்றால் சரிதான். முதலிகருப்பன் பத்திரத்தின் எல்லா இடத்திலும் கைரேகை வைத்ததை நான் பார்த்தேன், மற்ற விபரத்தை பத்திர எழுத்தர் ராமசாமி தான் எழுதினார். அந்த பத்திரத்தில் பத்திர எழுத்தர் ராமசாமியும் கையொப்பம் செய்து அவருடைய முத்திரையையும் வைத்தார். என்னிடம் காட்டப்படும் செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான் சொல்லும் பத்திர எழுத்தர் ராமசாமியின் கையொப்பம் எங்குள்ளது என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது என்பதால், அதனால், பத்திர எழுத்தர் ராமசாமியின் கையொப்பம் எங்கு உள்ளது என்று என்னால் சொல்ல முடியாது. ஆனால், பத்திர எழுத்தர் ராமசாமி

செட்டில்மெண்ட் ஆவணத்தில் எங்கள் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

4. அந்த பத்திர எழுத்தர் ராமசாமி அவிநாசி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எங்களுடன் வந்தார் என்றால் அவர் அங்கு வரவில்லை, எங்களிடமே கொடுத்து அனுப்பி விட்டார். பத்திர அலுவலகத்தில் வைத்து இன்னாரென்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் உள்ள எங்களுடைய பெயர் விலாசத்தை யார் எழுதினார் என்றால் பத்திர அலுவலகத்தில் இருந்தவர்கள் எழுதினார்கள். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் தேதி மட்டும் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தேதியை யார் எழுதினார் என்றால் பத்திரம் எழுதிய ராமசாமி தான் எழுதினார். நான் சொல்வது போல செட்டில்மெண்ட் ஆவணம் தயார் செய்யப்படவும் இல்லை, 19–ம் தேதி நான் பத்திர அலுவலகத்திற்கே நான் செல்லவில்லை என்றும் அந்த செட்டில்மெண்ட் ஆவணம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்ற விபரமே எனக்கு தெரியாது என்றும், நான் சொல்லும் ராமசாமி இந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல ராமசாமிக்கு நாயக்கன் தோட்டத்தில் அவருக்கு ஆபிசும் கிடையாது, நான் அங்கு செல்லவும் இல்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் முதலிகருப்பனுக்கு பக்கவாத நோய் ஏற்பட்டு அவர் நடக்க முடியாமலும், பேச முடியாமலும் படுத்த படுக்கையாக தான் இருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அதனால், முதலிகருப்பன் எங்கள் முன்னிலையில் கைரேகை வைத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படும் உயில் சாசனம் பி.வா.சா.ஆ.11–ல் தேதி 19 என்று கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தேதியையும்

பத்திர எழுத்தர் ராமசாமி தான் எழுதினார். அந்த உயில் சாசனத்தில் கடைசி பக்கத்தில் உள்ள எனது சாட்சி கையெழுத்திற்கு அடுத்து உள்ள எனது அப்பா பெயர் மற்றும் எனது விலாசத்தை யார் எழுதினார் என்றால் பத்திர எழுத்தர் ராமசாமி தான் எழுதினார். நான் சொல்வது பொய் என்றும், அந்த விபரத்தை நான் சொல்லும் பத்திர எழுத்தர் ராமசாமி எழுதவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த உயில் சாசனத்தை எனது மாமியார் எழுதி வைத்ததாக சொல்வதும் பொய்,அ தில் எனது மாமியார் கைரேகை வைத்ததாக சொல்வதும் பொய், அந்த உயில் சாசனத்தை பத்திர எழுத்தர் ராமசாமி தான் தயார் செய்தார் என்று சொல்வதும் பொய், இந்த உயில் சாசனத்திற்கும் நான் சொல்லும் பத்திர எழுத்தர் ராமசாமிக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. உயில் சாசனத்தில் இன்னாரென்று நிரூபித்தவர் என்ற இடத்தில் உள்ள எனது சாட்சி கையொப்பத்திற்கு அருகில் உள்ள விபரங்களை யார் எழுதினார் என்றால் பத்திர அலுவலகத்தில் இருந்தவர்கள் தான் எழுதினார்கள். அதனால், அந்த விபரங்களை பத்திர எழுத்தர் ராமசாமி எழுதவில்லை என்றால் சரிதான். எனது மாமியார் 19–ம் தேதி பத்திர அலுவலகத்திற்கு வந்ததாக சொல்வதும், அங்கு வைத்துள னது மாமியார் உயில் சாசனத்தில் கைரேகைகள் வைத்தாக சொல்வதும் பொய் என்றும், அந்த உயில் சாசனம் மோசடியாக தயார் செய்துள்ளார்கள் என்றும், அதனால், என் முன்னிலையில் உயில் சாசனம் தயார் செய்து அதில் எனது மாமியார் கைரேகை வைத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் அந்த 19–ம் தேதியில் உயில் சாசனம் நான் சொல்லும் பத்திர எழுத்தர் ராமசாமியின் பத்திர ஆபிஸில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றும், அந்தராமசாமி அந்த உயில் சாசனத்தை தயாரே செய்யப்படவில்லை என்றும், நானும் அங்கு

செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் என் முன்னிலையில் எனது மாமியார் உயில் சாசனத்தில் கைரேகைகள் வைத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

6. எனது மச்சனன் கருப்புசாமிக்கு முதலிகருப்பன் மேட்டுப்பாளையம் சொத்தைப் பொறுத்து எழுதி வைத்த மற்றொரு செட்டில்மெண்ட் ஆவணம் (பி.வா.சா.ஆ.13) பற்றிய விபரம் எனக்கு தெரியாது, எனது மாமனார் முதலிகருப்பன் சொல்லி தான் எனக்கு தெரியும். அந்த விபரத்தை செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்த பிறகு சுமார் 20 நாட்கள் முதலி கருப்பன் எனது வீட்டிற்கு வந்த போது எனக்கு தெரியும். அவிநாசியில் வைத்து பி.வா.சா.ஆ.11 மற்றும் பி.வா.சா.ஆ.12 ஆவணங்களில் நான் கையெழுத்து செய்து விட்ட பிறகு எனது மாமனார் முதலிகருப்பன் எனது வீட்டிற்கு உறமுறையாக வந்த போது அவரது மகளான எனது மனைவியிடம் வந்திருந்த போது எனது முன்னிலையில் சொன்னார். எவ்வளவு இடைப்பட்ட காலத்தில் எங்கள் வீட்டிற்கு வந்தார் என்றால் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. மேற்படி ஆவணங்கள் ஏற்பட்டு சுமார் 1 மாதம் கழித்து வந்திருப்பாரா? என்றால் இருக்கலாம், ஆனால் அவர் என் வீட்டிற்கு வந்து சொன்னார். மேட்டுப்பாளையம் சொத்தை பொறுத்து எனது மாமனார் எழுதி வைத்ததாக சொல்லப்படும் பி.வா.சா.ஆ.13 செட்டில்மெண்ட் ஆவணத்தையும், பி.வா.சா.ஆ.11 மற்றும் பி.வா.சா.ஆ.12 ஆவணங்களையும் ஒரே இடத்தில் ஒரே நபரால் தான் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 3 ஆவணங்களையும் நாங்கள் எல்லோரும் சேர்ந்து தான் மோசடியாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல.

7. எனது பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்துக்கள் எனது மாமனார் முதலிகருப்பனுக்கும், கருப்புசாமிக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லியுள்ளது தவறு என்றும், அந்த சொத்துக்களை அவர்கள் பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டு கிரையம் வாங்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த பூர்வீக சொத்துக்களில் ஒரு பகுதி சொத்தை விற்று தான் எனக்கும் ஒரு சொத்தை வாங்கி கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனார் முதலிகருப்பன் நிலக்கடலை வியாபாரம் மற்றும் பருத்தி வியாபாரம் செய்து வந்ததாக சொல்வது பொய் என்றும், அவர் விவசாய வேலை மட்டும் தான் செய்து வந்தார் என்றால் சரியல்ல. எனது மாமனார் முதலிகருப்பனுக்கு எத்தனை ஏக்கர் பூமி இருந்தது என்றும், அதில் எத்தனை ஏக்கர் பூமியை விற்றார் என்றும், எவ்வளவு பூமியை விலைக்கு வாங்கினார் என்றும் எனக்கு நேரடியாக தெரியாது. எனது மாமனார் முதலிகருப்பன் பேச முடியாத நிலையில் இருந்து வந்த நிலையில் பத்திர அலுவலகத்தில் வைத்து சார்பதிவாளர் அவரிடம் சொத்தை யாருக்கு எழுதி வைக்கிறீர்கள் என்று கேட்டறிந்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. அதேபோல் எனது மாமியார் புத்திசுவாதீனம் இல்லாமல் இருந்து வந்த நிலையில் அவர் பத்திர அலுவலகத்திற்கு வந்ததாகவும், பத்திர அலுவலகத்தில் வைத்து சார்பதிவாளர் அவரிடம் சொத்தை யாருக்கு எழுதி வைக்கிறீர்கள் என்று கேட்டறிந்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் எனது மச்சனன் 2–ம் பிரதிவாதியின் செல்வாக்கினை பயன்படுத்தி பத்திர அலுவலக அதிகாரிகளை பயன்படுத்தி கொண்டு மோசடியாக தயார் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 2–

ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி அருக்காணியம்மாள் இந்த வழக்கில் 4–ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அதனால், என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல, நிராகரிக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**<u>5,6, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதி தரப்பு குறுக்கு விசாரணையையே 5,6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

**மறுவிசாரணை :–** **இல்லை.**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.03 13:46:26 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**